DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 27/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | சங்கர் (Pw.5) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் உண்டுகுத்தி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 11.01.2022ம் தேதியன்று நான் எனது ஊரில் விறகு வெட்டிக் கொண்டிருந்தபோது பகல் 12.00மணியளவில் எனது மனைவி போன் மூலம் எனது மகன் கண்மாய் பக்கமாக சென்றுவிட்டு நரிக்குடி – பார்த்திபனூர் செல்லும் சாலையை கடந்தபோது நரிக்குடியில் – பார்த்திபனூர் நோக்கி வந்த கார் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்த கார் மோதி விபத்து

ஏற்பட்டதாக கூறினார்கள். நான் சம்பவ இடம் சென்றபோது எனது மகனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது எனது மகனுக்கு நெஞ்சு, முகம், கால் ஆகிய இடங்களில் காயம் இருந்தது. எனது மகன் பரமக்குடி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 27/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : நந்தினி (Pw.4)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் சாத்திசேரியில் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். அசா1ஐ எனது கணவரின் அக்கா. கடந்த 11.01.2022ம் தேதியன்று சாத்திசேரியில் உள்ள எனது நாத்தனார் எனது வீட்டிற்கு வந்திருந்தார். எனது கணவரின் அக்காவின் மகன் ரவிபிரசாத் எங்கள் வீட்டில் தங்கி படித்து வந்தார். பகல் 11.45மணியளவில் நானும், எனது கணவரின் அக்கா, எனது கணவர் ஆகியோர்கள் நரிக்குடி – பார்த்திபனூர் செல்லும் சாலை அருகிலேயே உள்ள எங்கள் வீட்டின்

முன்பாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது 9 வயதுள்ள எனது கணவரின் அக்கா மகன் ரவிபிரசாத் அந்த சாலையை கடந்து தெற்கு பக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது நரிக்குடியில் – பார்த்திபனூர் நோக்கி வந்த கார் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், வீட்டிற்கு வருவதற்காக வடக்கில் இருந்து தெற்கு பக்கமாக நடந்து வந்தபோது வடக்கு பக்கம் செல்ல வேண்டிய கார் தெற்குபுறமாக வந்து எனது கணவரின் அக்கா மகன் மீது மோதிவிட்டது. நாங்கள் சென்று பார்த்தபோது எனது கணவரின் அக்கா மகனுக்கு நெஞ்சு, முகம், கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது கணவரின் அக்கா மகன் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார். வழிபோக்காக சென்ற காரில் எனது கணவரின் அக்கா மகனை பார்த்திபனூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு எனது கணவரின் அக்கா மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்தை ஏற்பட்டவுடன் சற்றுதூரம் கார் தள்ளி போய் நின்றது. விபத்தை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 27/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : ஆனந்த முருகன் (Pw.3)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் சாத்திசேரியில் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். அசா1ஐ எனது அக்கா. கடந்த 11.01.2022ம் தேதியன்று சாத்திசேரியில் உள்ள எனது அக்கா எனது வீட்டிற்கு வந்திருந்தார். எனது அக்காவின் மகன் ரவிபிரசாத் எங்கள் வீட்டில் தங்கி படித்து வந்தார். பகல் 11.45மணியளவில் நானும், எனது அக்கா, எனது மனைவி நந்தினி ஆகியோர்கள் நரிக்குடி – பார்த்திபனூர் செல்லும் சாலை அருகிலேயே உள்ள எங்கள் வீட்டின் முன்பாக

உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது 9 வயதுள்ள எனது அக்கா மகன் ரவிபிரசாத் அந்த சாலையில் கண்மாய் பக்கம் சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக வடக்கில் இருந்து தெற்கு பக்கமாக நடந்து வந்தபோது நரிக்குடியில் – பார்த்திபனூர் நோக்கி வந்த கார் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், கண்ட்ரோல் இழந்த வடக்கு பக்கம் செல்ல வேண்டிய கார் தெற்குபுறமாக வந்து எனது அக்கா மகன் மீது மோதிவிட்டது. நாங்கள் சென்றோம். எங்கள் எதிர்திசையில் இருந்து மாரிமுத்து என்பவர் வந்தார். நாங்கள் சென்று பார்த்தபோது எனது அக்கா மகனுக்கு நெஞ்சு, முகம், கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது அக்கா மகன் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார். வழிபோக்காக சென்ற காரில் எனது அக்கா மகனை பார்த்திபனூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு எனது அக்கா மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

எனது அக்கா மகன் மீது மோதிய காரின் கடைசி நான்கு பதிவு எண் 2644 என்று இருந்தது. காரை ஏற்றி விபத்தை ஏற்படுத்திய எதிரியின் பெயர் கரிசல்குளத்தைச் சேர்ந்த முனியசாமி என்று கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 27/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | மாரிமுத்து (Pw.2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் சாத்திசேரியில் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். கடந்த 4வருடத்திற்கு முன்பு நான் மாட்டிற்கு புல் புடுங்கிக் கொண்டு நரிக்குடி – பார்த்திபனூர் செல்லும் சாலையில் எனது ஊரில் கிழக்கில் இருந்து மேற்காக இடது ஓரமாக நடந்து வந்துக் கொண்டிருந்தேன். அப்போது 3 ஆண் குழந்தைகள் வடக்கில் இருந்து தெற்காக சாலையை கடந்தார்கள். மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வேகமாக வந்த கார் வடக்கு பக்கமாக

செல்லாமல் தெற்கு பக்கமாக சென்ற ஒரு பையன் மீது மோதிவிட்டது. கார் வேகமாக வருவதை பார்த்து நானே சாலையை விட்டு கீழே இறங்கி நடந்து சென்றேன். மோதியவுடன் நான் சென்று பார்த்தபோது ரோட்டிற்கும் தெற்கு பக்கமாக அந்த பையன் கிடந்தார். அந்த பையனுக்கு தலை, நெஞ்சு, கால்களில் காயம் இருந்தது. பேச்சு மூச்சு இன்றி இருந்தார். அதன் வழியாக வந்த லாரி அடிபட்ட பையனை பார்த்திபனூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு அந்த பையன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 27/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : போதும்பொண்ணு (Pw.1)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of March 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் உண்டுகுத்தி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 11.01.2022ம் தேதியன்று சாத்திசேரியில் உள்ள எனது அம்மா வீட்டில் இருந்தேன். அப்போது எனது மகன், மகள் ஆகிய இருவரும் எனது அம்மா வீட்டில்தான் இருந்தார்கள். பகல் 11.45மணியளவில் நானும், எனது தம்பி ஆனந்த முருகன், அவரது மனைவி நந்தினி ஆகியோர்கள் நரிக்குடி – பார்த்திபனூர் செல்லும் சாலை அருகிலேயே உள்ள எங்கள் வீட்டின் முன்பாக உட்கார்ந்து பேசிக்

கொண்டிருந்தபோது 9 வயதுள்ள எனது மகன் ரவிபிரசாத் அந்த சாலையில் கண்மாய் பக்கம் சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக வடக்கில் இருந்து தெற்கு பக்கமாக நடந்து வந்தபோது நரிக்குடியில் – பார்த்திபனூர் நோக்கி வந்த கார் அதிவேகமாக வந்து எனது மகன் மீது மோதிவிட்டது. சத்தம் கேட்டவுடன் நாங்கள் சென்று பார்த்தபோது எனது மகனுக்கு நெஞ்சு, முகம், கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது மகன் பேச்சு, மூச்சு இன்றி கிடந்தார். வழிபோக்காக சென்ற காரில் எனது மகனை பார்த்திபனூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். மருத்துவமனையில் நான் இருந்தபோது நரிக்குடி போலிசார் என்னிடம் புகார் வாங்கிச் சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எனது மகன் மீது காரை ஏற்றி விபத்தை ஏற்படுத்திய எதிரியின் பெயர் கரிசல்குளத்தைச் சேர்ந்த முனியசாமி என்று கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.